Registered as a Newspaper

யாழ் நகரில்
நினைவில் வைத்திருங்கள்
✱ அன்பான உபசரிப்பு
✱ குறைந்த விலை
✱ சுவை மிகுந்த உணவு வகைகள்
நாடுங்கள்:
R.S.R. Green
Peking Palace
4th Cross Street,
JAFFNA.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை: ரூ. 1=25

இந் நெருக்கடியான நிலையிலும்
Lunch packets 12/50
Hot-Dogs 10/-
Ice Cream 6/-
Chinese Roll 3/50
Chilled Beer 34/-
மேலதிகக் கட்டணங்கள் இல்லை.
R.S.R.
Green Peking palace
4th Cross Street,
JAFFNA,

மலர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ மாசி மீ 5 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 18 (17-02-1987) UTHAYAM A LIVELY TAMIL DAILY இதழ் 70

## வடக்கு - கிழக்கில்
# தாக்குதலை நிறுத்துவது குறித்து அரசில் குழப்பம்

### ஜே. ஆர் - லலித் கருத்துகள் ஒன்றுக்கு மற்றது முரண்

கொழும்பு, பெப்ரவரி 17

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் - தமிழ் பிரதேசங்களில் இராணுவத் தாக்குதலை நிறுத்த உத்தரவிடப்பட்டதா இல்லையா?

இது குறித்து அரசாங்க வட்டாரங்களில் குழப்ப நிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்ப் பகுதிகள்மீது கடந்த இரண்டு வாரங்களாகத் தீவிரமாக நடத்தப்படும்இராணுவத் தாக்குதலை நிறுத்தவேண்டும் என்ற கருத்து ஜனாதிபதி ஜே. ஆருக்கு இருந்தாலும் தேசிய பாதுகாப்பு மந்திரி திரு. அத்துலத்முதலி அதற்கு முரணான கருத்துடன் நடவடிக்கைகளைமேற்கொண்டு வருவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத் தாக்குதல்களை நிறுத்தும்படி அரசு உத்தரவிட்டதா இல்லையா? என்பது குறித்து கொழும்பு, புதுடில்லி அரசு வட்டாரங்களில் குழப்பநிலை நிலவுகின்றதாக பி. பி. ஸியும் நேற்று அறிவித்தது.

"சன்" ஆங்கில நாளிதழ் பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரங்காட்டி வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த அரசு உத்தரவிட்டுள்ளது என்று நேற்று தலைப்புச் செய்தி வெளியிட்டது.

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க சுமுக நிலை தோன்ற வேண்டும். அதற்கு முன்னோடியாக இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று அமைச்சர்கள் சிலர் வற்புறுத்தியதைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகச் 'சன்' தனது செய்தியில் தெரிவித்தது.

இது பற்றி வெகுஜன தொடர்பு நிலையத்தில் விசாரித்த போது, சொல்லுவதற்கு ஒன்றுமில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சு பின்னர் 'சன்' செய்தியை மறுத்து அறிக்கை வெளியிட்டது.

கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்காவே 'சன்' பத்திரிகைக்கு அச்செய்தியைக் கொடுத்திருக்க வேண்டும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையில் நேற்றைய 'டெயிலி நியூஸி'ல் அமைச்சர் அத்துலத் முத

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை சோதனை செய்யும்

யாழ்ப்பாணம், பெப். 17

நயினாதீவுக்கு சென்று வருவோரை இனி கடற்படையினரே சோதனை செய்வர்.

நயினாதீவு பௌத்த விகாரையில் தங்கி நின்ற சிப்பாய்கள் பலாலிக்கு இடமாற்றப் பட்டதை அடுத்தே இந்த புதிய நடைமுறை செயற்படுத்தப்படுகிறது.

கடந்த காலங்களில் கடற்படையினரும் சிப்பாய்களும் மாறி மாறி பயணிகளை சோதனையிட்டு வந்தனர். (இ-10)

## அத்துலத் சொல்வது இது....!

கொழும்பு, பெப். 17

ஆயுதங்களை கைவிட்டு பேச்சுக்களை நடத்த தீவிரவாதிகள் முன்வந்தால் ஒழிய இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டா.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

கொழும்பு அரசு ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் அத்துலத்முதலி இதனைத் தெரிவித்தார்.

படைபலத்தினூல்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று நாம் கூறவில்லை. அரசியல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உரிமையாளர் வராத கடைகள் உடைக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், பெப்.17

பரந்தன் சந்தியில் உள்ள மேலும் பல கடைகள் சிப்பாய்களினால் நேற்று உடைக்கப்பட்டன.

கடை உரிமையாளர்களை வந்து தளபாடங்களையும் பொருட்களையும் எடுத்துச் செல்லுமாறு சிப்பாய்கள் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

உரிமையாளர்கள் வராத கடைகளே சிப்பாய்களினால் உடைக்கப்பட்டு உணவுப் பொருள்கள் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

உடைத்த கடைகளில் சிப்பாய்கள் தற்போது மண்மூடைகள் அடுக்கி பாதுகாப்பாகத் தங்கியுள்ளனர். (இ-10)

## பரந்தன் சந்தியிலும் சிப்பாய்கள் சோதனை

யாழ்ப்பாணம், பெப் 17

பரந்தன் சந்தியிலும் பயணிகள் வாகனங்களை சிப்பாய்கள் தற்போது சோதனையிட்டு வருகின்றனர்.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியிலும், பரந்தன் கிளிநொச்சி வீதியிலும் பாரிய மரக்குற்றிகள் போடப்பட்டு பயணிகள் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.

பயணிகளை கீழ இறக்காமல் சிப்பாய்கள் மட்டும் வாகனங்களுக்குள் ஏறி பொதிகளையும் அடையாள கார்ட்டுகளையும் பார்வையிடுகின்றனர். (இ-10)

## நாடாளுமன்ற புதிய கூட்டத்தொடர்

கொழும்பு, பெப். 17

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் எதிர்வரும் வியாழன் அங்குரார்ப்பணஞ் செய்யப்படவுள்ளது.

அன்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூட்டத்தொடரைத் தொடக்கி வைத்து உரையாற்றுவர். (இ-எ)

## உள்ளத்தின் ஆழத்தில் உறைந்த வரலாறாகிவிட்டது

### பிரபாகரன் அனுதாபம்

யாழ்ப்பாணம், பெப்.17

கடந்த சனிக்கிழமை கைதடியில் நடைபெற்ற எதிர்பாராத விபத்து மறக்கவோ அழிக்கவோ முடியாதபடி மனத்தின்



பிரபாகரன்

ஆழத்தில் உறைந்த ஓர் வரலாறாகிவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தி ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றின் நாயகர்கள் என்ற தலைப்பில் விடுதலைப்புலிகளின் அரசியற் குழு துண்டுப்பிரசுரம் மூலம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

தமிழீழ போராட்டத்தில் மாபெரும் வரலாற்றுச் சாதனை புரிந்துவந்த -மேலும் புரியவிருந்த தியாக வேங்கைகள் தற்செயலாக ஒரு நொடியில் காற்றோடு காற்றாக கரைந்தனர்.

தமிழீழ வரலாற்றில் மாபெரும் பங்கேற்ற இந்த வரலாற்று நாயகர்களுக்கு நாம் எமது வீர வணக்கத்தை தெரிவிக்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## புலிகள் இழப்பு அதிரவைக்கிறது

### ஈழவர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 17

கைதடியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பு எம்மை அதிர வைக்கிறது.

ஈழவர் முன்னணி விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

அரசின் அடக்குமுறைகளுக்கு முகம் கொடுத்து முன்னேறிக் கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் போராளிகளை இழப்பதென்பது ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

இந்த வகையில் கடந்த சனிக்கிழமை கைதடியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளில் பலர் எதிர்பாராமல் நடந்த வெடி விபத்தில் தங்கள் இன்னுயிரை ஈந்துள்ளார்கள்.

தரையாலும் வானாலும் ஈழப் பிரதேசமெங்கும் ஈழவரை கொன்று குவித்து வரும் சிறிலங்கா அரசின் வேதனைச் சுமைகள் மாறமுன்பே குடாநாட்டில் தமிழீழ விடு

(4-ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த சிறுவனும் மரணம்

யாழ்ப்பாணம், பெப் 17

மன்னார் கூராயில் உள்ள நீர்ப்பாசன அதிகாரியின் அரச விடுதி மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலால் காயமடைந்திருந்த விஜயசமூர்த்தி விக்னேஸ்வரன் என்ற ஏழு வயதுச் சிறுவன் நேற்று மரணமானார்.

இச் சம்பவத்தில் இவரது தகப்பனார் ஏற்கனவே மரணமாகியிருந்தார்.

தாயார் காயமடைந்த நிலையில் தொடர்ந்தும்

(4ஆம் பக்கம் பார்க்க)



கருணாநிதி

## தி. மு. க. பேரணி! படுகொலைகளைகண்டித்து

சென்னை, பெப். 16

இலங்கைத்தமிழர் படுகொலைக்கு ஆளாவதை ஆட்சேபித்து திராவிட முன்னேற்ற கழகம் நேற்றுப் பிற்பகல் கண்டனப் பேரணி ஒன்றை சென்னை நகரில் நடத்தியது.

பேரணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் கலைஞர் கருணாநிதி தலைமை வகித்தார்.

பேரணி, மரீனா கடற்கரையில் உள்ள அண்ணா சமாதியில் இருந்து புறப்பட்டு அண்ணா சிலையைச் சென்றடைந்தது.

இதனிடையில் நேற்று மதுரை மாவட்ட கலக்டர் அலுவலகம் முன்பாக ஜனதாக் கட்சித் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இலங்கைத் தமிழர் இன்னல்களுக்குள்ளாவதை நிறுத்தத் தலையிடும்படி தமிழ்நாடு அரசையும் மத்திய அரசையும் கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மகஜர் ஒன்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-எ)

# குடாநாடு முழுவதும் துக்கம் அனுஷ்டிப்பு

### வீதிகளில் கறுப்புக் கொடிகள்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ் குடாநாடு முழுவதும் நேற்று துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன.

போக்கு வரத்துக்களும் நேற்று நிறுத்தப்பட்டிருந்தன.

சனிக்கிழமை கைதடியில் இடம்பெற்ற வெடிகுண்டு விபத்தில் பலியான விடுதலைப் புலிகளுக்கும், மக்களுக்கும் அஞ்சலி செலுத்து முகமாகவே துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

சகல வர்த்தக நிறுவனங்கள் முன்பும் வாழை மரங்களும் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

வீதிக்கு வீதி சந்திக்கு சந்தி கறுப்புக் கொடிகள் பச்சிலை மரங்கள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

நகரெங்கும் ஒலி பெருக்கி மூலம் சோக இசை ஒலிபரப்பப்பட்டது.

பல பொதுமக்கள் தமது சட்டைகளில் கறுப்புப் பட்டிகளை அணிந்து சென்று தமது

(4-ம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

17—02—1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:

11 03 முதல் 12.33 வரை

ராகுகாலம்:

3 33 முதல் 5.03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## யாழ். ஆஸ்பத்திரி:
# ஒக்சிஜன் சிலிண்டர்கள் கப்பலில் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், பெப் 17

யாழ் ஆஸ்பத்திரியில் உள்ள 20 ஒக்சிஜன் சிலிண்டர்கள் கப்பல் மூலம் திங்கட்கிழமை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கொழும்பு-யாழ் வீதிப் போக்குவரத்து அடிக்கடி தடைப்படுவதன் காரணமாக கப்பல்மூலம் சிலிண்டர்களை அனுப்பி வைக்கும் முயற்சிகளை யாழ் போதனா ஆஸ்பத்திரி பணிப்பாளர் டாக்டர் தச்சிணாமூர்த்தினியன் மேற்கொண்டார்.

இம்முயற்சிக்கு யாழ் இணைப்பதிகாரி அனுமதி வழங்கினார். அதைத் தொடர்ந்தே காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து 'நெப்ருன்' என்ற மாலைதீவுக் கப்பலில் சிலிண்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இச்சிலிண்டர்கள் கொழும்பு சென்று திரும்புவதற்குரிய செலவுகளை பொறுத்துக்கொள்ள காங்கேசன்துறை ஜெயபாலசிங்கம் நிறுவனத்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முனி



குருவுக்கு மிஞ்சின சிடர்மார்தானே இப்ப அதிகம். அதை நிரூபிச்சால் என்னெண்டு அமைச்சர் நினைச்சிட்டாரோ?

## அடகு வைத்தோர் சங்க போராட்டத்தை ஒத்தி வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப் 17

அடகு வைத்தோர் சங்கம் மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக நடத்திவரும் மறியல் போராட்டத்தை சிறிது காலத்துக்கு ஒத்திவைக்க வேண்டும்.

நேற்று வின்சர் கலையரங்கில் நடைபெற்ற அடகு வைத்தோர் சங்கத்தினர் மக்கள் வங்கி ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மக்கள் வங்கி ஊழியர்கள் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அடகு வைத்தோர் சங்கம் தொடர்ந்தும் மக்கள் வங்கிக் கிளைகள் முன் நடத்திவரும் போராட்டம் காரணமாக நாம் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எமது சம்பளப் பணத்தை பெறமுடியாத நிலையில் நாம் இருக்கி

(4ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சு மூலமே தீர்வு வேறெந்தவழியும் ஆகாது

### கொல்வின் அரசுக்கு யோசனை

கொழும்பு, பெப் 17

நாட்டின் இன்றைய பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்க்கவேண்டும். வேறு மார்க்கம் எதுவும் அதற்கு ஆகாது இதனை நான் அரசாங்கத்திற்கு ஆலோசனையாக, நல்லெண்ணத்துடன் சொல்கிறேன்.

இவ்வாறு தெரிவித்தவர் கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா.

அவருக்கு நேற்று 80 வயது பூர்த்தி. அதனையொட்டி ரூபவாஹினியில் செய்தியாளர்பேட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் 12 பேர் பலி!

கொழும்பு, பெப்,17

திருகோணமலை மாவட்டத்தில் மூதூரில் நேற்று 12 தமிழர்கள், பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர்.

12 பேரும் தமிழ்ப் போராளிகள் என்று வெகுஜன தொடர்பு நிலையம் அறிவித்தது.

நிரைக்கண்ணி வெடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

**சேவை**

தினசரி எங்களுடைய ஸ்தாபனம் இரவு 8.45 வரை திறந்திருக்குமென அறியத் தருகின்றோம். யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற், 124, ( RR நல்லையா வீதி , முதலாம் குறுக்குத்தெரு ', யாழ்ப்பாணம். தொலைபேசி 23460.


# 380 ஆசிரியர்கள்

# வவுனியாவில் பற்றாக்குறை

நெடுங்கேணி, பெப். 17

வவுனியா மாவட்டத்தில் 380 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இருந்து வருகிறது

வவுனியா பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு ஐ. சபாநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பகுதி நாள் கூட்டம் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் திரு பே. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு சபாநாயகம் மேலும் பேசுகையில், மாணவர்களே வருங்கால எமது சந்ததியினர். எனவே மாணவர்கள் குறிப்பாக வட பகுதியில் உள்ள மாணவர்கள் கல்வியின் மூலம் மட்டுமே எவ்விதமான முன்னேற்றத்தையும் அடைய முடியும்.

இப்பிரிவில் உள்ள பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை நேரடியாக அறிவித்தால் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்க முடியும் என்றார். (இ-105)

## சகல பிரச்சினைகளையும் கண்டறிந்து தீர்க்க முயற்சி செய்யப்படும்

### பதில் அதிபர்களை நிரந்தரமாக்கல் பற்றிய கலந்துரையாடலில் உரை

பலாலி, பெப். 17

தனியே ஆசிரியர்களது பிரச்சினைகளை மட்டும் மையமாக வைத்து இயங்காது சகல கல்விப் பிரச்சினைகளையும் கண்டறிந்து அவற்றைத் தீர்க்க பலவழிகளிலும் செயற்பட்டு வரும் சக்திமிக்க ஒரேயொரு தொழிற் சங்கமாக இன்று இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் நிமிர்ந்து நிற்கின்றது

யாழ் பட்டப் படிப்புகள் கல்லூரியில் நடைபெற்ற பதில் அதிபர்களை நிரந்தரமாக்கல் சம்பந்தமாக நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றிய யாழ் மாவட்டச் செயலாளர் திரு. கே. கேசவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்களில் பல்கலைக்கழகக் கதவுகள் பூட்டப்பட்டு நுழைய வாய்ப்பற்ற பலர் வெளிவாரியாகப் பல கஷ்டங்களின் மத்தியில் கல்விகற்றபோது அவர்களுக்கு பரீட்சையில் தோற்ற பேராதனை கொழும்பு போன்ற பகுதிகளுக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையை இலங்கை ஆசிரியர் சங்கம் தலையிட்டு யாழ் பல்கலைக்கழகத்தில் பரீட்சை எழுதும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

பதில் அதிபர்களாக இருந்து நிரந்தரப் பதவி கிடைக்காதவர்களுக்கு அப்பதவியை வழங்க எம்மால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு கல்வி அமைச்சு சம்மதித்து அங்கீகாரமளித்துள்ளது.

மிக விரைவில் அவர்களுக்கு நிரந்தரப் பதவி உயர்வும் வழங்கப்படும்.

அதுபோலவே இன்னும் பதில் அதிபர்களாக உள்ளவர்களுக்கு, நிரந்தர அதிபர் பதவி, அவர்களதும், அவர்களது பாடசாலைகளதும் தரத்திற்கேற்ப வழங்க நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

இப்படி திரு கேசவன் தெரிவித்தார்.

சுமார் 350க்கும் மேற்பட்ட அதிபர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அதிபர்களது பல பிரச்சினைகள் ஆராய்ந்து முடிவெடுக்கப் பட்டன. (இ-119)


## பிரயாண ஒழுங்குகள்

● ஓமான் ● குவைத் ● சவூதி

ஆகிய நாடுகளுக்கான தொழில் வாய்ப்புடன் செல்ல விரும்புவோர் உடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்

கடிதமூலம் தொடர்பு கொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும்

எமது முகவர் நிலையத்தினூல் பயணம் மேற்கொள்வோரின் பெயர் விபரங்களை வாரந்தோறும் வெளியிடுகிறோம் எமக்கு வட பகுதியில் வேறு கிளைகள் கிடையாது

உங்கள் (PASSPORT) கடவுச் சீட்டுக்கள் குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

எம்மிடம் (PASSPORT) விண்ணப்பப் படிவமும் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்
மதுரா வீடியோ கிளப்,
இல. 96, 4-ம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES
No 87 2/1, Kollupittiya Lane,
Kollupittiya, COLOMBO-3.
T-phone: 574000


## முதலாவது பிறந்த தின வாழ்த்து



செல்வி ஷாலினி சச்சிதானந்தன்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சச்சிதானந்தன் (விசேட சேவை அலுவலர்) மகாலெட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஷாலினி சச்சிதானந்தன் இன்று (17-02-87) தனது முதலாவது பிறந்த தினத்தை 'ரஞ்சனு வாசா' இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். செல்வியை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சேனுதி பெரியப்பா, பெரியம்மா, பாண்டியன்குளம் G. S. மாமா, மாமி, B.S.C. சித்தப்பா (U K), லோகா சித்தி (U K), பாலா மாமா - மாமி (ஜேர்மனி) நவி மாமா - மாமி, சதா சித்தப்பா (சுவிஸ்), கருணா மாமா (கனடா), S. K நாதன் சித்தப்பா (கொழும்பு), குட்டி மாமா (ஜேர்மனி) விவே (பிரான்ஸ்), லிங்கன் சித்தப்பாமார், தர்மராஜ் மாமா - மாமி மற்றும் மாமிமார்கள், ஜீவன், ஜெகன், மச்சான்மார் சிறிகலா நலச்ஷனு பிரியா, தர்ஷனி, மச்சான்மார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கிருஞ்ஜியபதி மீனாட்சி அம்மன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## சத்தியங்கள் அறிமுக விழா

யாழ்ப்பாணம் பெப் 17

நெல்லை க பேரன் எழுதிய 'சத்தியங்கள்'' சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்

கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமையில் நல்லூர் இந்து விடுதியில் விழா நடைபெறும்.

திரு. சி. குணசிங்கம் முதற் பிரதியைப் பெறுவார்.

ஆணையாளர் திரு. சி. வீ. கே சிவஞானம் ஆசியுரையும், திருமதி கோகிலா மகேந்திரன் அறிமுகவுரையும் வழங்குவார்கள்.

கலாநிதி சோ கிருஷ்ணராஜா, கலாநிதி பார்வதி கந்தசாமி, திரு. சோ பத்மநாதன், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆய்வுரைகள் வழங்குவர் (இ-5)

## பார்வைக்கு வைக்கப்பட்ட சடலம்!

யாழ்ப்பாணம், பெப். 17

ஹெலிக்கொப்டர் மூலம் சுடப்பட்டு பலியான இளைஞர் ஒருவரது சடலம் பூநகரி இராணுவ முகாமுக்கு முன்பாக சனிக்கிழமை மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது

பூநகரி இராணுவ முகாம் சிப்பாய்கள் இந்த இளைஞனது சடலத்தை வீதியின் அருகே வைத்திருந்து வாகனங்களில் வருவோரை இறக்கி சடலத்தை அடையாளங் காட்டுமாறு கேட்டனராம். (இ-10)

## தளபாடம் அன்பளிப்பு

மானிப்பாய், பெப் 17

இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஒன்றிணைந்து ரூபா 5,600 பெறுமதி வாய்ந்த தளபாடங்களை அன்பளிப்பு செய்துள்ளனர் (இ-90)

## பஜனை மன்றங்கள் தோத்திரங்களை பேணிப் பாதுகாக்க வேண்டும்

வட்டுக்கோட்டை, பெப் 17

உள்ளத்திலுள்ள அழுக்கு நீங்கி தூய்மை பெறவும் எம்மைப் பீடித்துள்ள துயர் நீங்கவும் பரம்பொருளை பக்தியுடன் வழிபட தோத்திரங்கள் துணைபுரிகின்றன. நீண்ட பாரம்பரியமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும் தோத்திரங்கள் இந்து வழிபாட்டுக்குரிய சிறந்த சாதனங்களாகும். அவற்றை இத்தகைய பஜனை மன்றங்கள் வாயிலாகப் பேணிப் பாதுகாக்கக்கடமைப்பட்டுள்ளோம்

வட்டுக்கோட்டை உடுவில் பிள்ளையார் கோயில் பஜனை மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு 'இந்து வழிபாட்டு மரபில் தோத்திரங்களின் சிறப்பு' என்னும் பொருள் பற்றி உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப கோபால கிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய உப அதிபர் சிவநெறிக்காவலர் திரு. கு. சிவசுப்பிரமணியம் தலைமையில் விழா நடைபெற்றது.

கலாநிதி ப கோபால கிருஷ்ணன் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

தோத்திரங்களின் இறைவனை வழிபடும் மரபு மிகப் பழமை வாய்ந்தது வேதங்கள் பரம்பொருளை பாடல்களினால் போற்றும் மரபைச் சுட்டுகின்றன.

புராணங்களில் இறைவன் பெருமையும் திருவிளையாடல்களும் போற்றப்படுகின்றன இறைவனைத் துதிக்கத் துணை செய்யும் சகஸ்ரநாமங்கள் இவற்றிலே அடங்குவன.

இத்தகைய நீண்ட பாரம்பரியச் சிறப்புக் கொண்ட தோத்திரங்கள், திருமுறைகள் வாயிலாக உச்சநிலை அடைந்தன.

இப்படி அவர் கூறினார்.

இவ்விழாவில் பக்திப் பாடல்கள், கூட்டுப் பாடல்கள், பண்ணிசை ஆகியனவும் இடம் பெற்றன. (இ-161)

## பாடப் புத்தகம் மாட்டு வண்டியில்!

சாவகச்சேரி, பெப். 17

சாவகச்சேரி கல்வி வட்டாரப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடபுத்தகங்கள் மாட்டு வண்டிமூலம் எடுத்துவரப்பட்டன.

எரிபொருள் தட்டுப்பாடே இதற்குக் காரணம்

உயர்வகுப்பு மாணவர் ஒருவரே மாட்டு வண்டியைக் கொடுத்து உதவினார் எனத் தெரிய வருகிறது.

கல்வி அலுவலக உத்தியோகத்தர் யாழ் கல்விக் கந்தோர் சென்று இப்புத்தகங்களை எடுத்து வந்தார். (இ-31)

# எரிபொருள் தடையால் 50 சதவீத மாணவரின் கல்வி பாதிக்கப்படுகிறது

## சபா ஜெயராசா கூறுகிறார்

பருத்தித்துறை, பெப். 17

யாழ் மாவட்டத்திலுள்ள 20 சத வீதமான மாணவர்கள் இரவில் படிப்பதற்கு விளக்கு இல்லாமல் இருக்கிறார்கள் இன்று எரிபொருள் தடை காரணமாக 50 சதவீதமான மாணவர்கள் கற்பதற்கு வெளிச்சமின்றி கஷ்டப்படுகிறார்கள்.

கலாநிதி சபா ஜெயராசா இப்படித் தெரிவித்தார்

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய இராஜலிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கல்வியியற் கருத்தரங்கில் அவர் உரை நிகழ்த்தினார்

கருத்தரங்கை மாணவர் முன்னணியும் மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடத்தியது

கருத்தரங்கை பேராசிரியர் ப சந்திரசேகரம் தலைமை வகித்து நடத்தினார்.

கலாநிதி சபா ஜெயராசா தொடர்ந்து பேசியதாவது:-

வினைத்திறனுடைய கற்பித்தலை வகுப்பறையில் ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் பாடசாலை வேளை முழுவதும் கற்பித்துக் கொண்டிருக்காமல் மாணவர்களைத் தொழிற்பட வைக்க வேண்டும்.

கற்றலுக்குரிய சூழ்நிலையை ஒவ்வொரு ஆசிரியரும் ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

இன்று கல்வியில் பின் தங்கிய மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டமே உள்ளது.

இங்கு 66 1 சத வீத மானவர்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவுள்ளனர்.

இலங்கைச் சிங்களவரில் 89 4 சத வீத மாணவர்கள் எழுதி வாசிக்கத் தெரிந்தவராக உள்ளனர்.

புள்ளி விவரப்படி இன்று தமிழ் பேசும் பகுதிகளிலேயே எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள்.

இதனை இந்த நிமிடமே போக்குவதற்கு கல்வியாளர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் காலை மாலை எந்நேரமும் திறந்து வைக்கப்பட வேண்டும்.

மின் வெளிச்சமுள்ள பாடசாலைகளை விளக்கு வெளிச்சமின்றிக் கஷ்டப்படும் மாணவர்களின் வசதிக்காகத் திறந்து வைத்தல் அவசியம்.

ஆசிரியர்களைக் கௌரவித்து ஆசிரியர் தினம் அனுஷ்டிக்க வேண்டும் அதேபோல் சகல மாணவர்களையும் அவர்களது விருப்பம், ஆற்றலுக்கேற்ப தூண்டி அவர்களின் திறமைகளை வெளிக்கொணர வேண்டும்

அதற்கு மாணவர் விளையாட்டுப் போட்டிகள் என்னும் புற முயற்சிகளைத் தொடர வேண்டும்

இப்படி அவர் கூறினார்.

திரு. வ. ஆறுமுகம், திரு க. சின்னத்தம்பி, திரு. எம். ஜி புள்ளநாயகம், திரு இ. முருகையன், கலாநிதி எஸ். கிருஷ்ணராசா ஆகியோர் உட்படபலர் கருத்துரை வழங்கினார்கள். (இ-118)

# உறவுகள், உடைமைகளை இழந்தோர் உணர்வுகளை இழப்பதை தடுக்கும் பெரும் பணி

## புனர்வாழ்வுக் கழகம் பற்றி நச்சினார்க்கினியன்

யாழ்ப்பாணம், பெப். 17

வன்செயல்களால் பாதிக்கப்பட்டு உடைமைகள், உறவுகள், உயிர்களை இழந்து வருபவர்களை உணர்வுகளை இழக்காமல் செய்பவர்கள் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர்.

இவ்வாறு யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் கூறினார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு நேற்று கலைவிழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கல்லூரி அமரர் விசுவலிங்கம் மண்டபத்தில் தமிழ் மகளிர் அவையினரால் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே பணிப்பாளர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்,

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இதுவரை 2 கோடி ரூபா வரை அகதிகளுக்கு நிவாரணமாக வழங்கியுள்ளது. [illegible] தமிழராகிய நாம் வழி இயிருந்தோம் மற்றவை வெளிநாட்டு [illegible] வருந்தத்தக்க செயலாகும்.

அகதிகளுக்கு அள்ளிக் கொடுப்பதில் நாம் பின் நிற்கக் கூடாது என்றார்.

இக் கலைவிழாவில் திருமதி லீலா செல்வராஜாவின் கலைக்கோயில் நடன மாணவிகளின் ''கற்பின் சிறப்பு'' நாட்டிய நாடகமும், ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் [illegible] ஐக்கிய கழக கலாமன்றத்தினரின் [illegible] வீடுகள் விழிக்கின்றன'' நாடகமும் இடம் பெற்றன.

## மக்கள் முகம்

### சுதுமலை இந்து சமயவிருத்தி சங்கம்

யாழ்ப்பாணம், பெப். 17

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர்: மு. இராமநாதன் உபதலைவர் சி. சிவகுரு செயலாளர்: த. காசிநாதன் உபசெயலாளர்: இ ஹரிகிருஷ்ணு பொருளாளர்: சி தர்மலிங்கம்.

கணக்குப்பரிசோதகர்: பொ. ஜெயரத்தினம் மானிப்பாய்க் கோயிற் பற்று இந்து சமய விருத்திச் சங்கப் பிரதிநிதிகள்: மு இராமநாதன், த காசிநாதன் சி. தர்மலிங்கம் சே. பொன்னம்பலம் வே. சுப்பிரமணியம். (இ-ா)

## சீனி விலை உயர்ந்தது

கொழும்பு, பெப். 17

உலகச் சந்தையில் சீனி விலை அதிகரித்து உள்ளது

இக்கடந்த வாரம் உணவுத் திணைக்களம் கூடுதல் விலை கொடுத்து 10 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனியை வாங்கியுள்ளது

ஒரு மெட்ரிக் தொன் 223 அமெரிக்க டாலர் வீதம் இச்சீனி வாங்கப் பட்டது (ஆ-ா)

## வெங்காயப் பூ படும்பாடு!

சாவகச்சேரி, பெப். 17

சாவகச்சேரிச் சந்தைக்கு மிகப் பெருமளவில் வெங்காயப்பூ வருகிறது விற்பனை செய்யமுடியாத நிலையில் திரும்பக் கொண்டு செல்லவும் விரும்பாமல் சந்தையிலேயே சில வியாபாரிகள் விட்டுச் செல்கின்றனர்.

சந்தையில் தேடுவாரற்று விடப்படும் வெங்காயப்பூவை கூட்டி அள்ளிச் சுத்தப்படுத்துவதில் தொழிலாளர்களுக்கும் பெரும் சிரமம் ஏற்படுகிறது. (இ-31)

## புகைப்படச் சுருள் கொண்டுவரவும் அனுமதி இல்லை

புகைப்படச் சுருள்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரவும் வவுனியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில்புகைப்படச் சுருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வீடியோ கசெட்டுகள் கொண்டு வருவதும் தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (இ-10)

## மினிபஸ் கட்டணம் உயர்கிறது

சாவகச்சேரி பெப் 17

மினிபஸ்காரர்கள் சாவகச்சேரி யாழ்ப்பாணம் பிரயாணத்துக்கு பத்து ரூபாவை கட்டணமாக அறவிட ஆரம்பித்துள்ளனர்

நுணாவில் சந்தியில் இருந்து சாவகச்சேரிக்கு செல்வதற்கு நான்கு ரூபா அறவிடுகின்றனர்

சாவகச்சேரிப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களிடமும் இதே கட்டணமே பெறப்படுகிறது

சில வாகனங்கள் மட்டும் மூன்று ரூபா பெறுகின்றனவாம். (இ-31)

## பட்டுப்பூச்சி வளர்ப்புக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ் மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டத்திற்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய இளைஞர் மன்ற யாழ் மாவட்ட அதிகாரி திரு. கே எஸ். கார்த்தி தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை 25 ஆயிரம் ரூபாவும் பிரதேச அமைச்சு 1 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கவுள்ளன என்று அவர் தெரிவித்தார். (இ-5)


## தேவை: Fitters - Welders

யாழ்நகரிலுள்ள என்ஜினியரிங் நிறுவனமொன்றுக்கு பொருத்துனர், ஒட்டுனர், உதவியாளர் ஆகியோர் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். பூரண விபரங்களுடன் ஐந்து நாட்களுக்குள் விண்ணப்பம் அனுப்பவும்.

விளம்பர எண்: 54,
மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா:- OPEN VISA

லிபியா:- எலெக்றிக் வெல்டிங், காஸ் வெல்டிங்

அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டும்.

சிங்கப்பூர்:- கப்பலில் வேலை செய்வதற்கு விரும்புவோருக்கான பயண ஒழுங்குகள்

விபரங்களுக்கு கீழ்க் காணும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

றை ஸ்ரார் றவல்ஸ்
இல. 6, நவீன சந்தை மேல்மாடி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23881

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

முன்னேற்றம் என்பது இன்றைய முயற்சி; நாளைய நம்பிக்கை.

— எமர்ஸன்

உதயன்

உள்ளதை - உள்ளபடி - உடனுக்குடன்

இல. 15, கஸ்தூரியார் வீதி-ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 17-02-1987 த.பெ.இல. 23

# அகதிகள் நலன்களை கையாள்வோர் பெருக்கம்

அரசியல் பிரச்சினைக்கு அடுத்து தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையாக விளங்குவது அகதிகள் விவகாரம். இரண்டுக்கும் மிகமிக நெருங்கிய தொடர்பு உண்டு. முதலாவதில் இருந்துதான் இரண்டாவது பிறந்தது. இப்போது இரண்டும் ஒன்றோடு மற்றது பின்னிப் பிணைந்ததாகிவிட்டன.

அரசியல் நெருக்கடி அதிகரிக்க அதிகரிக்க, அகதிகள் பிரச்சினையும் பன்மடங்காகி வரும் நிலைமை தோன்றி உள்ளது.

ஆகையால் தமிழர் வாழ்விலே, அவர்களது எதிர்காலத்திலே அக்கறை உடைய சகலரும் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பிரச்சினையாகவும் அகதிகள் விவகாரம் உருவெடுத்து உள்ளது.

அதாவது அரசியல் பிரச்சினையில் செலுத்தப்படும் சம அளவு அக்கறை அகதிகள் நிவாரண புனர்வாழ்வுப் பணிகளிலும் தேவைப்படுகிறது.

அகதிகள் நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளின் தன்மை, பரிமாணம், எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவற்றை உதயன் வாசகர்கள் கடந்த இரண்டு தினங்களாக வெளி வந்த கட்டுரைத் தொடரை படித்து உணர்ந்திருப்பார்கள் என நம்புகிறோம்.

முன்கூறிய அம்சங்கள் தொடர்பாக மிகத் தெளிவான ஒரு நிலைமையை — மிக விளக்கமான ஒரு படத்தை — பேராசிரியர் கா. சிவத்தம்பி தந்திருந்தார். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவரான அவர் அனுபவ ரீதியிலும், ஆழ்ந்த நோக்குடனும் விடயங்களை மிகத் தெளிவாக விவரித்திருக்கிறார்.

அவர் தெரிவித்த கீழ்க்கண்ட விடயங்களை தமிழ் மக்கள் கவனத்தில் கொள்வது மிகமிக அவசியமும் அவசரமும் என்று நாம் கருதுகிறோம்.

* அகதிகளுக்கு நிவாரணம் அளிப்பது வேறு; புனர்வாழ்வு அளிப்பது வேறு. நீண்டகாலமாக நிவாரண வழங்குவதால் பல சமூகத் தாக்கங்கள் ஏற்படும். எனவே புனர்வாழ்வில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.
* அகதிகளுக்கான நிவாரண வேலைகளில் பல ஸ்தாபனங்கள் ஈடுபட்டுள்ளன. அவை ஒன்றிணைக்கப்பட வேண்டும். நிவாரணப் புனர்வாழ்வு வேலைகள் குறித்து தகுந்த தகவல்கள் இல்லை. அது குறித்து ஆய்வு நிலைப்பாட்டுத் தெளிவு அவசியம். பல தரவுகளைச் சேகரித்த பின்னர் புனர்வாழ்வு வேலைகளைத் திட்டமிட்டுச் செய்தல் அவசியம்.
* நிவாரண வேலைகளில் துஷ்பிரயோகம் (முப்பது சத விதம்) உண்டு. அது நீக்கப்பட வேண்டும்.
* நிவாரண, புனர்வாழ்வுப் பணிகள் சமூக செல்வாக்குத் தளமாகவோ சமூக அதிகாரமாகவோ மாறக்கூடாது. அது பொதுச் சேவையில் சமூக அதிகாரத்துக்கு இடம் கொடுக்கக்கூடாது.
* சர்வதேச ரீதியில் கிடைக்கும் உதவியைப் பெறுவதில் போட்டி. அதனால் நிவாரணமும், புனர்வாழ்வும் முக்கியமாகத் தேவைப்படும் இடங்கள் பின்தள்ளப்படும் ஆபத்து.
* அகதிகள் நிவாரண, புனர்வாழ்வுக்கு முழுக்க முழுக்க வெளிநாடுகளை நம்பியிருக்கக் கூடாது.
* அகதிகளாகி விட்டவர்களின் சுகாதார வசதியும், அவர்களது பிள்ளைகளின் கல்வி வசதியும், அகதிகளுக்கு உழைக்கக்கூடிய முயற்சி வழங்கப்படுதலும் இப்போது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்.

அகதிகளுக்கு உதவுவதாகக் கூறி இயங்கும் பல நிறுவனங்கள் உள்ளதால் ஏற்படக்கூடிய சிரமங்களையும், தவறுதல்களையும், அவை ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டிய தன் அவசியத்தையும் இப்பத்திகளில் நாம் ஏற்கனவே வலியுறுத்தி இருந்தோம்.

சமூக சேவை நிறுவனங்களிடையே போட்டி தவிர்க்கப்பட வேண்டும். மக்கள் சேவையைக் கருதிச் செய்யப்படும் வேலைகளில் சம்பந்தப்படுவோர் தமக்குச் செல்வாக்கும், அதிகாரமும் தேட முயற்சிப்பது ஆபத்தும்.

ஆகையால் அகதிகளுக்கு உதவும் நிறுவனங்கள் அல்லது சங்கங்கள் என்பன தகுந்த, திரிகரண சுத்தியுடன் பணிபுரியக்கூடியவர்களையில் ஒப்படைக்கப்படுவது பிரதானம்.

அகதிகளை ஏழைகளாகக் கருதி நீண்டகாலத்துக்கு நிவாரணம் வழங்குவது நிறுத்தப்பட்டுப் புனர்வாழ்வு அளிப்பதிலேயே முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அகதிகள் விவகாரம் திட்டமிடப்பட்ட முறையில் கையாளப்படுதலும் மிக அவசியம். இல்லையேல் பல குளறுபடிகள் ஏற்பட்டு அகதிகள் பாதிக்கப்படுவர் சமூகமும் பின்னடையும்.

அகதிகளின் நிவாரணப் பணிகளுக்கு முழுக்க முழுக்க வெளிநாட்டு உதவிகளை நம்பியிருக்கக் கூடாது எமது மக்களின் பங்களிப்பும் அதற்கு அவசியம். இதனைச் சகல மக்களும் உணர்ந்து உதவி புரிய வேண்டும். உதவிகளைச் சரியான முறையில் பயன்படுத்துவார்கள் என்ற நம்பிக்கைக்கு உரிய ஸ்தாபனங்களுக்கே உதவ வேண்டும் இதில் மக்கள் வெகு அவதானமாக இருத்தல் அவசியம்.

ஆனால் —

அகதிகள் நலன்களைக் கவனிப்போர் பெருகினால் பொதுமக்களின் உதவியை உரிய அளவுக்கு எதிர்பார்க்க முடியாது.

## மாஸ்கோவில் ஈரானிய மந்திரி

மாஸ்கோ, பெப் 16

ஈரானிய வெளிநாட்டமைச்சர் பேச்சுக்கள் நடத்துவதற்காக மாஸ்கோ போய்ச் சேர்ந்தார்.

ரஷ்யா - ஈரானிய உறவை வளர்ப்பதற்கான முயற்சியின் ஒரு கட்டமாக இப் பேச்சுக்கள் நடைபெறும்.

வளைகுடா யுத்தம் இப்பேச்சுக்களில் முக்கிய இடம்பெறும்.

வளைகுடா யுத்தத்தில் ரஷ்யா, ஈராக்குக்கு ஆயுதங்களை வழங்கி வருகின்றது.

ரஷ்ய அதிகாரிகளும் ஈரான் அமைச்சரின் விஜயத்திற்கு முக்கியத்துவம் அளித்து இருக்கின்றது. (இ-எ)

## பிரதமர், மந்திரிகள் இராஜினாமா

பரமரிபோ, பெப் 16

சூரிநாம் நாட்டுப் பிரதமரும் மற்றும் நான்கு அமைச்சர்களும் பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

அமைச்சர்களில் ஒருவர் வெளிநாட்டமைச்சர், ஹென்க் ஹெரன்பேர்க்.

பிரதமரின் பெயர் பெர்ராப் ராதாகிஷான்.

சூரிநாம், முன்னர் டச்சுக் காலனித்துவ நாடாக இருந்தது.

ஆளும் கட்சித் தலைமைப்பீடத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடே இவர்களின் இராஜினாமாவுக்குக் காரணம். (இ-எ)

## மிஸோரம் முடிவு இன்று

புதுடில்லி, பெப். 17

மிஸோரம் சட்ட சபைத் தேர்தல் முடிவுகள் இன்று செவ்வாய் பிற்பகலில் இருந்து வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்குகள் எண்ணப்படுவது இன்று காலை ஆரம்பமாகும்.

40 உறுப்பினர்கள் கொண்ட சட்டசபைக்கு 39 தொகுதிகளுக்கு மட்டுமே தேர்தல் நடைபெற்றது. ஒரு தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் போட்டியின்றித் தெரிவானார். (இ-எ)

## வெளி உலகில்

### குண்டுப் பயமுறுத்தல்

பிரெஞ்சு எயர்லைன் விமானம் ஒன்று வெடிகுண்டுப் பயமுறுத்தல் காரணமாக போர்த்துக்கலில் அவசரமாக கடந்த ஞாயிறு தரை இறக்கப்பட்டது.

சோதனையின் பின்னர் விமானத்தில் குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. (இ-எ)

# டாக்டர் ஷிவாகோ நாவலுக்கு ரஷ்யா அனுமதி

மாஸ்கோ, பெப்.16

ரஷ்ய எழுத்தாளரும் கவிஞருமான போரிஸ் பாஸ்டர் நாக் எழுதிய 'டாக்டர் ஷிவாகோ' நாவல் முதல் தடவையாக ரஷ்யாவில் வெளியிடப்பட்டுள்ளது.

டாஸ் செய்தி ஸ்தாபனம் இதனை அறிவித்தது.

பிரபல மாத சஞ்சிகையான 'நொவி மிர்' 'டாக்டர் ஷிவாகோ' நாவலைத் தொடராக வெளியிடும்.

ரஷ்ய சிவில் யுத்த காலத்தில் போல்ஷிவிக் அதிகார பலத்தை மையமாக வைத்து இந்த நாவலை திரு பாஸ்டர் நாக் எழுதினார்.

1957இல் இந்த நாவல் வெளியிடப்பட்டது. போல்ஷிவிக் புரட்சிக்கு எதிரானது இந்த நாவல் என்று அப்போதைய சோவியத் தலைமைப் பீடம் கண்டித்தது.

நாவலைத் தடை செய்து ரஷ்யா உத்தரவும் பிறப்பித்தது.

1958இல் இந்த நாவலுக்காக திரு. பாஸ்டர் நாக்குக்கு நோபல் இலக்கியப் பரிசு வழங்கப்பட்டது.

சோவியத் அரசின் நிர்ப்பந்தம் காரணமாக நோபல் பரிசை திரு. பாஸ்டர் நாக் ஏற்கவில்லை.

அரசினால் அவமதிக்கப்பட்ட நிலையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் திரு. பாஸ்டர் நாக் காலமானார். (இ-எ)

# நாடாளுமன்றக் குழு றேகன்மீது கண்டனம்

## உச்சிப்பேச்சில் நடந்து கொண்டது தவறும்!

வாஷிங்டன், பெப். 16

சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் நடத்திய பேச்சுக்களின் போது அமெரிக்க அதிபர் திரு. றேகன் நடந்து கொண்ட விதம் குறித்து ஜனாதிபதி றேகனை அமெரிக்க நாடாளுமன்றக் குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

கடந்த நவம்பரில் ஐஸ்லாந்து தலைநகரான ரெய்காவிக்கில் இரண்டு தலைவர்களின் உச்சி மாநாடு நடந்தது.

இப்பேச்சுக்களின் போது அமெரிக்க அதிபர் தலைமையிலான குழு நடந்துகொண்ட விதம் குறித்து நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கையை நான்கு மாதங்களின் பின்னர் அமெரிக்க நாடாளுமன்றக் குழு வாஷிங்டனில் வெளியிட்டது.

இந்த உச்சிமாநாட்டில் அதிபர் றேகன் ஆயத்தமற்ற நிலையில் கலந்துகொண்டார்.

நேசநாடுகளுடன் அதிபர் றேகன் இச்சந்திப்புக் குறித்து கலந்தாலோசிக்கவில்லை.

ஆயுத பரிகரணம் குறித்து ரஷ்ய அதிபருடன் எப்படிப் பேசுவது என்பது குறித்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன்கூட அதிபர் றேகன் ஆலோசனை நடத்தவில்லை.

இப்படி காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு அறிக்கையில் விமர்சித்துள்ளது.

இக்கண்டனம் குறித்து வெள்ளை மாளிகை அதிகாரிகள் கருத்து வெளியிடவில்லை. (இ-எ)

### கராச்சியில்

## மாநகர சபை மேயர் உறுப்பினர்கள் கைது!

கராச்சி, பெப் 16

கராச்சி மாநகரசபை மேயரும் உறுப்பினர்களும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வாகனங்களுக்கு விதிக்கப்படும் வரிப்பணம் மாநகரசபைக்கு கையளிக்கப்பட வேண்டும் என்று கோரி மேயரின் தலைமையில் உறுப்பினர்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

அப்போதே பொலீஸார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்து ஊர்வலத்தைக் கலைத்தனர். மேயர், உறுப்பினர்கள் உட்பட நூறு பேர்வரை பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். (நி-ச)

### நிபந்தனை கைவிடப்பட்டது

பெய்ரூட், பெப். 17

பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள 4 பேராசிரியர்களையும் விடுதலை செய்வதற்கு 400 அரபுக்கைதிகளையும் விடுவிக்கவேண்டும் என்ற நிபந்தனையைக் கடத்தல் செய்த இஸ்லாமிய ஜிஹாத் இயக்கம் கைவிட்டுள்ளது.

# ஒட்டகங்களில் உலகப் பயணம்

மஸ்கட், பெப். 16

கட்டார் நாட்டைச் சேர்ந்த இரண்டு அரபு இளைஞர்கள் ஒட்டகங்களில் உலகப் பயணம் ஒன்றை மேற்கொண்டு உள்ளனர்.

முதல் கட்டமாக 13 அரபு நாடுகளுக்குச் செல்வர். ஆறுமாதகால முடிவில் மொரொக்கோ அடைவர்.

இரண்டாம் கட்டப்பயணம் ஹொர்முஸ் நீரிணையில் இருந்து ஆரம்பமாகும்.

பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், பர்மா, சீனா ஊடாக தென்கொரியத் தலைநகரான சோலை 1988 இல் அடைவர். 1988 இல் சோலில் நடைபெறும் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளும் கட்டார் வீரர்கள் இரண்டு பேர், இரண்டாம் கட்டப் பயணத்தின் போது இவர்களோடு சேர்ந்துகொள்வர்.

இவர்கள் பயணத்தில் மூன்று ஒட்டகங்கள் கொண்டு செல்லப்படும்.

"ஜெட்விமானம் மட்டும் அல்ல, பாலைவனக் கப்பல்களையும் அரபுக்கள் பாவிப்பார்கள் என்பதனை உலகம் அறிந்து கொள்ளட்டும்" — இப்படி ஒட்டகப்பயணத்தை மேற்கொள்ள உள்ள இரண்டு இளைஞர்களில் ஒருவரான சாலிஹ் முகமது தெரிவித்தார்.

தினமும் 16 மைல் ஒட்டகப்பயணத்தை மேற்கொள்ள இவர்கள் திட்டமிட்டு உள்ளனர்.

மற்ற இளைஞரின் பெயர் ஆபிட், வயது 35. மூன்று குழந்தைகளின் தந்தை (இ-எ)

# அடுத்த வருடத்தில் அமுலுக்கு வரும் புதிய ஜீ. சி. ஈ. திட்டம்

திருத்தியமைக்கப்பட்ட புதிய கல்வித்திட்டத்தின்கீழ் 1988ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் ஜீ. சி. ஈ சாதாரணதர பரீட்சைச் சான்றிதழ் அளிக்கப்படுவதற்கான மதிப்பீட்டுத் திட்டம் (பரீட்சை) இருபகுதிகளைக் கொண்டதாக அமையும்.

1985ஆம் ஆண்டில் 1ஆம், 4ஆம் ஆண்டு வகுப்புக்களில் ஏற்படுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டமாற்றம் 1986இல் ஆண்டுகள் 2, 5, 7, 8, 9 என்னும் வகுப்புகளிலும் விரிவுபடுத்தப்பட்டு, 1987இல் ஆண்டுகள் 3, 6, 10 என்னும் வகுப்புகளினூடாக 1988இல் ஜீ. சீ. ஈ சாதாரணதர வகுப்புவரை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

1988இல் இருந்துபுதிய முறையாக ஜீ. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையும் பரீட்சிக்கப்படவுள்ளது.

இந்தப் புதிய ஜீ. சீ. ஈ. பரீட்சைத் திட்டத்தின் பகுதி Iஇன்கீழ் பாடசாலைப் பரீட்சார்த்திகள் கல்வித் திட்டத்தின் 9 பாடங்களிலும், தொடர்ச்சியானதோர் அடிப்படையில் ஆண்டுகள் 9, 10, 11 ஆகியவற்றில் மதிப்பீடு செய்யப்படுவர்.

தேவையான சந்தர்ப்பங்களில் செயல் முறைச் சோதனைகளும் நடத்தப்படும்.

காலத்திற்குக் காலம் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் வழிகாட்டல் குறிப்புக்களின் அடிப்படையில் கொத்தணி / பாடசாலை மட்டத்தில் தொடர்ச்சியான மதிப்பீட்டுத்திட்ட நிறைவேற்றத்தை விரிவுபடுத்தி இசைவுபடுத்துவதற்கு பரீட்சை ஆணையாளர், மாவட்ட மட்டத்தில் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர் கல்லூரிகளினதும், விரிவுரையாளர்கள், ஏனைய தொழிற்துறை ஆளணியினர் ஆகியோரைக்கொண்ட மீட்சிக்கும்சபைகளை நியமிப்பர்.

இறுதித்தரம்

இத்திட்டத்தின் கீழ் கொத்தணி - பாடசாலை மட்டத்தில் பரீட்சையின் பகுதி I இற்கான இறுதித்தரம் பின்வரும் பாடங்கள் ஒவ்வொன்றிலும் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும்.

சமயம், முதன்மொழி, ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், சமூகக் கல்வி, அழகியற்கல்வி. உடற்கல்வியும் உடனலக் கல்வியும், தொழில் நுட்பப் பாடம்.

முன்னைய ஜீ. சீ. ஈ. சாதாரண பரீட்சையைப்போலன்றி இதில் 9 பாடத்திற்கும் மாணவர்கள் தோற்றவேண்டியமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின் பகுதி II, ஆண்டு 11இன் இறுதியில் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் தேசிய மட்டத்திலான ஒரு பரீட்சையைக் கொண்டிருக்கும்.

இப்பரீட்சை முதன் முதலாக 1988ம் ஆண்டு இறுதியில் நடைபெறும் இப் பரீட்சையுடன், நேரடித் தொடர்பு கொண்ட திட்டங்கள் ஆண்டுகள் 9, 10, 11 என்பவற்றுக்குரிய கல்வித் திட்டங்களாகும்.

1988 ஆம்ஆண்டில் இப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் முதற்குழு மாணவர்கள் 9 ஆம் ஆண்டிற்கான திருத்திய கல்வித் திட்டத்தை 1986 ஆம் ஆண்டில் பின்பற்றுபவர்களாவர்.

அவர்கள் ஆண்டு 10, 11 ஆகியவற்றுக்கான திருத்திய கலைத்திட்டங்களை முறையே 1987 ஆம் 1988 ஆம் ஆண்டுகளில் பின்பற்றுவர்.

பாடங்கள்

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் இப்பரீட்சைக்கான பாடங்கள் பின்வருமாறு அமையும்:-

முதன்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி என்பவையாகும்.

பரீட்சையின் தேசிய மட்டத்திலான பகுதி 2 இல் சமயமும் ஒரு பாடமாகவிளங்கும்.

எனினும் பரீட்சார்த்திகள் சமயபாடத்தைப் பொறுத்தவரையில் ஒன்றில் பரீட்சைத் திணைக்களத்தால் தயாரிக்கப்படும் வினாத்தாள்களுக்கு அமர்வதன் மூலம் அன்றேல், அங்கீகரிக்கப்பட்ட சமய பாடப் பரீட்சைச் சபைகளால் நடத்தப்படும் தேசியப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதன் மூலம் இத்தேவையைப் பூர்த்திசெய்ய முடியும்.

இது, முறைசார் பாடசாலை முறைக்கு வெளியேயுள்ள நிறுவனங்களினால் இதுவரையில் சமயக்கல்விக்கு ஆற்றப்பட்ட தொண்டினை அங்கீகரிப்பதாகவும் சமய நிறுவனங்களால் நடத்தப்படும் சமயக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பற்றி பாடசாலைப் போதனையைக் குறைநிரப்புச் செய்ய மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலம் அந்நிறுவனங்களின் மேலதிக வளர்ச்சிக்குச் செயலூக்கமளிப்பதாகவும் அமையும்.

பரீட்சைத்திணைக்களம் சமயப்பாடப் பரீட்சைச் சபைகளுக்கு இப்பரீட்சைகள் நடத்துவதற்கான தொழில் நுட்ப ஆதரவை அளித்து வரும்.

இந்நோக்கத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட சமய பாடப் பரீட்சைச் சபைகள் நடத்தப்படும் பரீட்சைகளைப் பரீட்சைத் திணைக்களம் காலத்திற்குக் காலம் அறிவிக்கும்.

சமயத்தில் தேசியப் பரீட்சைகளை நடத்தும் தகைமை வாய்ந்தவையாக சமயபாடப்பரீட்சைச் சபைகள் கணிக்கப்படும் காலம்வரை- அத்தகைய பரீட்சைகளுக்குத் தோற்ற மாணவர்கள் யாவரும் விருப்புத் தெரிவிக்கும்காலம் வரை- பரீட்சைத்திணைக்களம் மேற்கூறப்பட்ட ஐந்து பாடங்களுக்கான அதேஅடிப்படையில்சமயத்தில் தேர்ச்சிப்பரீட்சைகளை நடத்தும்.

பரீட்சையின் பகுதி II இற்குத் தோற்ற முதன் முதலாக விண்ணப்பிக்கும் பாடசாலைப் பரீட்சார்த்திகள் பரீட்சையின் பகுதி I இற்குப் பெற்ற தரங்களைப் பாடசாலைஅதிபர்கள் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பும் விண்ணப்பப் படிவங்களில் பதிதல் வேண்டும், தரங்கள் குறிப்பிடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சைத்திணைக்களத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்களில் பகுதி I, பகுதி II ஆகிய இரண்டிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட தரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

பரீட்சையின் பகுதி I, பகுதி II ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரங்கள் ஆண்டு 11 இற்கு அனுமதிக்கப்படுவதற்கான தகைமையைத் துணிவதில்கருத்தில் கொள்ளப்படும்.

தற்போதைய கல்வித் திட்டத்தின் கீழான ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை 1988 ஆம் ஆண்டிலும், அதற்குப் பின்னரும், தற்போதைய கல்வித் திட்டங்களின் கீழ் ஒரு தடவையேனும் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே நடத்தப்படும்.

பரீட்சை ஆணையாளரின் தலைமையின் கீழ் பரீட்சையின் பகுதி I, பகுதி II ஆகிய இரண்டையும் திட்டமிட்டு நடத்துவதற்கும், திட்டத்தைத் தொடர்ச்சியான மீளாய்வின் கீழ் வைத்திருப்பதற்குமாக கல்வி அமைச்சினுள்ளிருந்தும், வெளியேயிருந்தும் பெறப்படும் தொழிற்றுறை ஆளணியினரைக் கொண்ட ஒரு தேசிய

(4ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

குறள்:

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

பொருள்:

காட்சிக்கு எளியவனும், கடுஞ்சொல் கூறாதவனும் இருந்தால், அந்த மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டை உலகம் புகழும்.

# உழைப்பாளரைஇழந்த நிலையில் குடும்பங்கள்

## தையல் பயிற்சி நிலைய திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், பெப். 17

நாட்டின் தற்போதைய சீரற்ற நிலைமைகளால் பல குடும்பங்கள் உழைப்பாளர்களை இழந்துள்ளன. இதனால் பல பெண்கள் வருமானம் இன்றி தொழில் இன்றி அல்லலுறுகின்றார்கள்.

யாழ் மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. பிதா. ம இ பயஸ் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

மல்லாகம் புனித சகாயமாதா ஆலய தொழில் மண்டபத்தில் பெண்களுக்கான தையல் பயிற்சி நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், யாழ் ஆயரின் பேருதவியாலும் யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் ஒத்தாசையாலும் இப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால நம்பிக்கையற்று வாழும் பெண்களுக்கு இப்பயிற்சி நிலையம் ஓர் நம்பிக்கையை உருவாக்கும் என்றார்.

சுன்னாகம் பங்குத் தந்தையும் நிலைய இயக்குநருமான வண. பிதா அல்பிரட் யோசராசா உரையாற்றுகையில், மாதர்களின் இன்றையமுன்னேற்றம்தான் எதிர்கால சமுதாயத்தின் அத்திவாரமாக அமையப்போகின்றது.

எமதுபெண்கள் பொருளாதாரத்தில் மேம்பாடடைய இத்தையற்றுறை வழிவகுக்கும் என்றார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

87 A/L
விஞ.விடை வகுப்புக்கள்
பொருளியல்: திரு வரதராஜன் - சனி, ஞாயிறு 5-30
கணக்கியல்: திரு. வன்னியசிங்கம் - புதன், வெள்ளி 4 - 5
வர்த்தகம்: திரு ரட்ணம் - புதன், வெள்ளி 3 - 4

# உதயன்

17 - 02 - 1987 செவ்வாய்க்கிழமை

KEEN CENTRE
88, பலாலி றோட், திருநெல்வேலி.
Spoken English
with GRAMMAR
by Reginold
ஆரம்பம்: 21 - 02 - 1987
பிரிவு: II 2.00 p.m.

சிறுபான்மையினரைப் பாதுகாப்பதே ஜனநாயகம்

# போராளிகளுடன் பேச்சு நடத்தக் கோரி

## ஜனாதிபதிக்கு பகிரங்கக் கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 17

அடக்கு முறைகளைக் கைவிட்டு போராளிகளுடன் அமைதிப் பேச்சுக்களை நடத்த முன்வரும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு வலிகாமம் வடக்கு பிரசைகள் குழுக்கள் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எட்டுப் பக்க மகஜரில் பிரசைகள் குழுக்கள் ஒன்றியம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோள் பகிரங்கக் கடிதமாகத் தென்னிலங்கையில் உள்ள ஏனைய அரசியல் சமூக, மதத் தலைவர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

சகல இனங்களும் சமமாக நடத்தப்படும் நாட்டில்தான் ஜனநாயகம் இருக்கமுடியும் என்று அரசியல் சிந்தனையாளர்கள் தெரிவிக்கின்றனர்-

சிறுபான்மையினர் உரிமைகளை பெரும்பான்மையினர் மதிக்க வேண்டும்-

சிறுபான்மையினர் பாதுகாக்கப்படுவது ஜனநாயகத்தின் ஓர் அம்சமாகும்-

துரதிஷ்ட வசமாக ஜனநாயகம் என்ற சொல் பெயரளவில்தான் உள்ளது-

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது. (இ-ஏ)

### கிராம அபி. சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 17

சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை சங்க மண்டபத்தில் நடைபெறும். வலி மேற்கு உதவி அரச அதிபர் திரு து வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சங்கானை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி பொன்மலர் சிவானந்தன், திரு. எஸ். தேவநாயகம், சங்கானை கிராம சேவையாளர் திரு. தி இராசபாலன், சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ் பி ஜெயகுமார் சங்கானை சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி அதிகாரி திரு. சு. விஜயநாதன். பயிர்ச்செய்கை அதிகாரி திரு. ஜி சிதம்பரநாதன், விசேட சேவை அதிகாரி திரு கதிர்காமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர் (இ-ஏ)

## ஷெல்லுக்குத் தப்பிய பெண் லொறியால் மோதுண்டு மரணம்

சுன்னாகம், பெப் 17

'ஷெல்' தாக்குதலுக்கு தப்பிய குடும்பப் பெண்ணை லொறி மோதிக்கொன்றது.

இந்த பரிதாபச் சம்பவம் சுன்னாகத்தில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது.

கடந்த சனி இரவு பலாலி இராணுவத்தினர் சரமாரியாக சுன்னாகம் நோக்கி 'ஷெல்' தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சுன்னாகம் மயானப் பகுதி, மின்சார நிலையப் பகுதிகளில் தொடர்ச்சியாக ஷெல்கள் விழுந்து கொண்டிருந்தன.

கணவனுடன் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு பாதுகாப்பிடம் நோக்கிச் செல்ல முயன்ற திருமதி இ இலகுராஜா (39 வயது) புன்னாலைக்கட்டுவன்-சுன்னாகம் வீதியால் வந்து கொண்டிருந்த போது வெளிச்சமின்றி வந்த லொறியால் மோதப்பட்டு மரணமானார்.

இவரது கணவரான முன்னாள் தபால் அதிபர் திரு.இலகுராஜா லொறியினால் மோதப்பட்டாராயினும் காயங்களுடன் உயிர் தப்பினார்.

தெல்லிப்பழை அரச வைத்திய நிலையத்தில் பிரேத பரிசோதனை நடைபெற்றது.

உறவினரிடம் பிரேதம் கையளிக்கப்பட்டது. (இ-27)

### ஜோர்தான் செல்வோருக்கு புதிய கட்டுப்பாடு

கொழும்பு பெப் 17

திருப்பி வரும் டிக்கெட்டுடன் செல்பவர்களே ஜோர்தானுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவர்.

ஜோர்தான் அரசு முன் கண்டவாறு அறிவித்துள்ளது

வேலைவாய்ப்புத் தேடி ஜோர்தான் செல்லும் இலங்கையர் அங்கு நிரந்தரவாசிகளாக மாறும் நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவே ஜோர்தான் அரசு இந்த நிபந்தனையை விதித்துள்ளது. (இ-ஏ)

### கொல்லப்பட்ட மூவரில் ஒருவர் உபதபால் அதிபர்

கொழும்பு, பெப் 17

பொலன்னறுவைப் பகுதியில் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று தமிழ்ப் பயணிகளில் ஒருவர் சேனுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த உபதபால் அதிபர் என்று தெரிய வருகின்றது.

பொலன்னறுவையில் இருந்து 24 மைல் தொலைவில் உள்ள கடவத்தைமடு என்னுமிடத்தில் இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

ஊர்காவல் படையினர் 3 தமிழ் ஆண் பயணிகளை காட்டுக்குள் இழுத்துச் சென்று சுட்டுக் கொன்றனராம்.

உயிரிழந்த 3 பேரில் ஒருவரின் சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் 3 ஊர்காவல் படையினர் தேடப்பட்டு வருகின்றனர்.

(இ-ஏ)

### துர்நாற்றம் வீசும் பிரேத அறை

யாழ்ப்பாணம், பெப் 17

யாழ்- ஆஸ்பத்திரி பிரேத அறையில் கடந்த இரண்டு நாட்களாக ஒரே துர்நாற்றம் வீசுகிறது

பல காலமாக இங்கு இயங்க முடியாத நிலையில் இருந்த குளிர்சாதனப் பெட்டிகள் இன்னும் திருத்தப்படவில்லை

இதனால் அடையாளம் காண்பதற்காக பிரேத அறையில் வைக்கப்படும் சடலங்களையும் நீண்ட நாட்களுக்கு வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (இ 10)

### ஒக்சிஜன் . . . . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தினர் சம்மதித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள திரு. க ஜெயபாலசிங்கம் இதற்குச் சம்மதித்து தாவல் அனுப்பியுள்ளார்

இதே போன்று கடந்த நவம்பரிலும் 26 சிலிண்டர்கள் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு திருப்பிப் பெறப்பட்டன.

கடந்த திங்கள் அனுப்பப்பட்ட சிலிண்டர்கள் ஒக்சிஜன் நிரப்பப்பட்டு பத்து தினங்களுக்குள் யாழ் வந்து சேரும் என்று தெரிய வருகிறது.

குருநகரில் உள்ள மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் ஐஸ் தொழிற்சாலைக்குரிய காஸ் சிலிண்டர்களும் இதே கப்பலில் அனுப்பப்பட்டுள்ளன.

### அத்துலத் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு ஒன்றின் மூலமே நெருக்கடி நிலைக்கு முடிவு காணப்படவேண்டும் என்பதே அரசின் நம்பிக்கை,

இப்படி திரு அத்துலத்முதலி சொன்னதாக 'டெயிலி நியூஸ்' நேற்றுச் செய்தி வெளியிட்டது. (இ-ஏ)

### புலிகள் . : . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இந்த நிகழ்வு எம்மை அதிர வைத்துள்ளது

ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது

கொள்கை உறுதியுடனும், குறிக்கோள் இலட்சியத் திடனும் தாயகத்தின் விடுதலைக்கு தங்கள் இன்னுயிரை ஈந்த இப் போராளிகளின் பாதச் சுவடுகளில் ஈழவர் முன்னணி தனது அஞ்சலி மலர்களைச் சாற்றி நிற்கிறது.

எந்தவொரு போராளியும் அழிந்து போவதில்லை. அவன் நம்மோடு எப்போதும் வாழ்ந்து கொண்டே இருப்பான் என்ற எமது நடைமுறைத் தத்துவத்தின் படி தீச்சுவாலை மத்தியிலே உடல் சிதறி ஈழ மண்ணை முத்த மிட்ட வீரப்போராளிகளுக்கும், அவர்களுடன் இன்னுயிர் ஈந்த ஈழவர்களுக்கும் எமது கண்ணீரின் காணிக்கைகள் உரித்தாகட்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## விளையாட்டரங்கு

# 4 விக்கெட் இழப்புக்கு 301 ஓட்டங்கள் பெற்ற மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், பெப் 17

மத்திய கல்லூரி அணிக்கும் மகாஜனா அணிக்கும் இடையேயான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 301 ஓட்டங்களை எடுத்து சாதனை ஒன்றை நிலைநாட்டியது.

மத்திய கல்லூரி அணித் தலைவர் ரெரி மகாலிங்கம் கணேசலிங்கம் ஆட்டமிழக்காமல் 115 ஓட்டங்களையும் கலாவண்ணன், விவேகானந்தன் ஆகியோர் முறையே 89, 53 ஓட்டங்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது

அடுத்து ஆடிய மகாஜனா அணி 21.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது முரளிதரன் 5 விக்கெட்டுக்களைப் பெற்றார்.

யாழ் கல்லூரிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டிகளின் ஒரு கட்டமாகவே இந்த இரண்டு அணிகளும் மோதின.

இந்தப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது (இ-ஏ)

## இந்தியா - பாக் வெற்றிதோல்வி இல்லை

கல்கத்தா, பெப் 16

கல்கத்தா கிரிக்கெட் டெஸ்ட் நேற்று வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது

பாக்கிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5விக்கெட்டுக்கள் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்ததைத் தொடர்ந்து போட்டி சமமாக முடிந்தது.

இந்தியா
1 ஆவது இன்னிங்ஸ் - - 403
2 ஆவது இன்னிங்ஸ் - -181/3

பாகிஸ்தான்
1 ஆவது இன்னிங்ஸ் - - 229
2 ஆவது இன்னிங்ஸ் - - 179/5

(இ-ஏ)

### தாக்குதலை - - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வியின் பேட்டி வெளிவந்தது

தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுக்களுக்கு இணங்கும்வரை இராணுவ நடவடிக்கை தொடரும் - இப்படி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அப்பேட்டியில் கூறியிருந்தார்

இது பெரும் குழப்ப நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்தியாவின் நிபந்தனைகளை ஏற்று ஜனாதிபதி ஜெயவர்த்தன எழுதிய பதிலுக்கும் இராணுவத் தாக்குதல் குறித்து அவரது கருத்துக்கும் அமைச்சர் அத்துலத்தின் கருத்துக்கும் ஒத்துவருவதாக இல்லை.

இந்த நிலையில் புதுடில்லியில் இந்திய அரசு எடுக்க இருக்கும் ராஜதந்திர நடவடிக்கைகளும் குழப்ப நிலையிலேயே உள்ளன. - இவ்வாறு பி. பி. ஸி கொழும்புச் செய்தியாளர் ஜோன் ரெற்றி தெரிவித்தார். (அ-ஏ)

### காயமடைந்த- - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மரணமடைந்த சிறுவனின் மரணவிசாரணை நேற்று ஆஸ்பத்திரி பொலீஸ் பகுதியில் நடைபெற்றது. (இ-10)

### குடா - - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கத்தை வெளிப்படுத்திக்கொண்டனர்.

வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன

இறந்த விடுதலைப் புலிகளின் உருவப்படங்கள் சந்திகளில் வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டு குத்து விளக்கும் கொளுத்தப்பட்டிருந்தது.

சுவரொட்டிகள் மூலமும் துண்டுப்பிரசுரம் மூலமும் மக்கள் தமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டனர்.

(இ-10)

### அடகுவைத் . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றோம். எனவே அடகு வைத்தோர் சங்கத்தினர் தமது போராட்டத்தை ஒத்திப் போடவேண்டும்-

இப்படி மக்கள் வங்கி ஊழியர்கள் கேட்டுக் கொண்டனர்.

கூட்டத்துக்கு மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளரும் சமூகம் கொடுத்திருந்தார்.

அடகு வைத்தோர் சங்கத்தின் நான்கு கோரிக்கைகளையும் மக்கள் வங்கி நிர்வாகம் ஏற்றுக்கொள்ளும் வரை மறியல் போராட்டம் கைவிடப்பட மாட்டாது என அடகு வைத்தோர் சங்கத்தினர் தெரிவித்தனர்

கூட்டம் முடிவு ஏதுவும் இன்றி முடிவடைந்தது. (இ-10)

### பேச்சுமூல- - -

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கண்டனர்

அந்தப் பேட்டியிலேயே முன் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

நாட்டை இரண்டாகக் கூறுபோடுவது கூடாது ஆனால் தமிழர்களின் குறைகள் தீர்க்கப்பட வேண்டும் அதற்கு என்ன செய்ய வேண்டும். அரசாங்கத்தின் அடம்பிடியை மாற்ற வேண்டும்.

இன்றைக்குச் செய்ய வேண்டியது என்னவெனில், ஈழம் கேட்பவர்களுடன் சமாதானமாகப் பேசிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அதைவிட வேறு எந்த மார்க்கமும் ஆகாது என்கிறார். (அ)

### மூதூரில்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஆயுதப் படையினர் முற்றுகையிட்டபோது இடம் பெற்ற மோதலில் தமிழ்ப் போராளிகள் உயிரிழந்தனர்-

இப்படி வெகுஜன தொடர்பு நிலையம் தெரிவித்தது.

நேற்றுக் காலை முதல் மாலை 5 மணிவரை பாதுகாப்புப்படையினர் தேடுதல் நடவடிக்கையில் இறங்கினர். அப்போதே 12 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# பண்டைக்கால கலைகள் அழிந்துவிடக் கூடாது

## "காத்தவராயன்" வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், பெப் 17

பண்டைய கலைகள் பல இடங்களில் அழிந்துவிட்டன. சில இடங்களில் அரை உயிருடன் இடம்பெறுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் காத்தவராயன் நாடக நூல் வெளிவருவதும், மேடை ஏறுவதும் புத்தாக்க முயற்சி ஆகும்

இவ்வாறு யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் கருத்து வெளியிட்டார்.

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை நாட்டார் கலைக்குழுவின் "காத்தவராயன்" நூல் வெளியீடு, "காத்தவராயன்" நாடக அரங்கேற்றம் ஆகியன யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றபோது சு. வித்தியானந்தன் தனது தலைமையுரையில் இக் கருத்தை வெளியிட்டார்.

காத்தவராயன் நாடக அண்ணாவியார் சி. கணபதிப்பிள்ளை அவர்களைத் துணைவேந்தர் சு வித்தியானந்தன் பொற்கிழி வழங்கி கௌரவித்தார்.

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவைச் செயலாளர் திரு. எஸ் பி பாலசிங்கம் தனது ஆரம்ப உரையில் பேரவையின் செயற்பாடுகளை விளக்கினார்.

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

யாழ் பல்கலைக் கழகத் தமிழ்துறைப் பேராசிரியர் அ சண்முகதாஸ் நாட்டுக் கூத்து மெட்டுகளை நயம்படப் பாடிக் காட்டி ஆற்றிய நூல் ஆய்விலே பின்வருமாறு கூறினார்:-

ஈழத்தில் முதன் முதலாகக் காத்தவராயன் நாடகமே அச்சேறுகிறது

ஈழத்துக் கூத்து வரலாற்றில் முக்கிய இடம்பெறும் இந்த நாடகம் ஒரு படிநிலையைக் காட்டுகிறது

ஆரம்ப காலத்தில் கூத்தில் ஆடல், பாடல் இரண்டும் அவசியமாக இடம்பெற்றன

மட்டக்களப்பில் எல்லாக் கூத்துகளிலும் ஆடல் இடம்பெற்றது. பட்டக்களப்புக் கூத்துக்கள் ஆடலுடன்தான் எப்போதும் ஆரம்பமாவது மரபாகும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக் கழகத் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ வேலுப்பிள்ளை தனது ஆய்வுரையில் :-

இந்த நூலிலே காத்தவராயன் பிறப்புப் பற்றிய கதைமாற்றஞ் செய்யப்பட்டு உள்ளது கண்ணன் படு முட்டாளாக வர்ணிக்கப்படுகிறான். இலக்குமி ஏழைப் பிச்சைக்காரியாக விபரிக்கப்படுகிறாள்

மேல்மட்ட மக்களுக்கு சமூகத்தின் அடி மட்டத்தில் உள்ள மக்கள் மீதுள்ள வெறுப்பினை இந்த நாடகம் பிரதிபலிக்கிறது என்றார்.

பதிப்பாசிரியர் கலாநிதி இ பாலசுந்தரம் பதிலுரை கூறினார்.

நாட்டார் கலைக்குழு ... இந்த ... பொன்னுத்துரை நன்றி கூறினார். (இ-9)

### அடுத்த ...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

பரீட்சைச்சபை நியமிக்கப்படும்.

இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் சகல ஜீ. சி ஈ. வகுப்புக்களுள்ள பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (இ-119)

★ வெளிவந்து விட்டான்

அர்ச்சுனா

வெளிநாட்டுச் சஞ்சிகையோ என்று வியக்க வைக்கும் வண்ண முகப்பு அட்டையுடன் இப்போது விற்பனையாகிறது பெப்ரவரி மாத இதழ்.

★ சாதனை புரிந்த யாழ். சிறுர்கள்
★ வெள்ளைக் கிறிஸ்மஸ்
★ யப்பானின் மறுபெயர் சுவர்க்கமா ?
★ அறிவுலக அறிமுகம்
★ வியத்தகு விண்வெளி
★ கணிதப் புதிர்
★ எண் சிலம்பம்

இன்னும் எத்தனையோ புதிய அம்சங்கள் ! ! !

★

இன்றே உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

தனிப்பிரதி ரூபா 3/- மட்டுமே.

இபபத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 18 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 17 - 02 - 1987 தொலைபேசி இல. 24805 22078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 18, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a News - paper at the General Post Office. Under Number QJ /94 / N/ 87. Telephone, 24805, 22078

யாழ். இந்து பெற்ற
அருந்தவச் செல்வங்கள் - வீரர்கள்
பொன் அம்மான், கேடி, ரஞ்சன், சித்தார்த்தன்
மற்றும் கைதடியில் மரணித்த போராளிகளுக்கு
●●●●● எமது வீர அஞ்சலி ●●●●●

தன் இன மீட்புக்காய்
தாய்த் திரு நாட்டுக்காய்
இன்னுயிர் ஈந்த பத்து
இணையிலா வீரப் புலிகளே
கண்ணிமைக் காட்சி யாகி
கடுதியாய் மறைந்தே போனீர்
எண்ணியே நாம் வாடுகின்றோம்
எங்கினிக் காண்போம் உம்மை!

நெருக்கம் மறவாத நண்பர்கள்,
ஜெய.., வித்தி, ஈசன், இளங்கோ, முருகவேள், ஜெயந்தன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org